<u>DEPOSITION OF WITNESSES</u>

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI**

Name : ராஜேஷ் **STC.No.495/2025**
Fathers's Name : செந்தில்குமார்
Village : நயினார்பாளையம்
Taluk :
Age : 34

Petitioner - (Pw1)(LW1)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2026

**எதிரிகள் ஆஜர். சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.கணேசமூர்த்தி அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**<u>முதல் விசாரணை.</u>**

நான் மேற்படி கிராமத்தில் வசித்து கள்ளக்குறிச்சியில் போக்குவரத்து காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 08.03.2025 அன்று மாலை 05.40 மணியளவில் கள்ளக்குறிச்சி போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளராகிய நானும் என்னுடன் HG 133 அய்யப்பன் மற்றும் HG 106 பாரதி ஆகியோர்களுடன் முழுசீருடையில் எங்கள் பெயர் பொறித்த அடையாள பட்டையில் பொறித்து கள்ளக்குறிச்சி உழவர் சந்தை அருகே போக்குவரத்தை சீர் செய்து கொண்டிருந்தோம். அப்போது தியாகதுருகம் மார்க்கத்திலிருந்து கள்ளக்குறிச்சி நோக்கி 2ம் எதிரி TN-15-MH-0570 என்ற பதிவெண் கொண்ட எமகா R15 இருசக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் 1ம் எதிரி அமர்ந்து போக்குவரத்து விதிகளை மீறி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் எங்களை கடந்து ரோட்டின் வடபுறமாக எதிர்திசையில் மேற்கு நோக்கி சென்றனர். அப்போது எதிர் திசையில் வாகனங்கள் வந்ததால் போக்குவரத்து முற்றிலுமாக எதிரிகளால் தடைசெய்யப்பட்டது. இதனால் நான் எதிரிகளின் இருசக்கர வாகனத்தை மறித்து இடதுபுறமாக சாலை விதிகளை பின்பற்றி அவர்களை போகசொன்னேன். ஆனால் அவர்கள் வார்த்தை மீறி இருசக்கர வாகனத்தின் இன்ஜினை ரேஸ் செய்து நகர்த்த முயற்சி செய்தார்கள். நான் அவர்களை இறக்கிவிட்டு வண்டியை சாலையின் ஓரமாக நகர்த்தி வண்டியின் சாவியை கைப்பற்றி கொண்டேன். பின்னர் அவர்கள் என்னை பார்த்து 1ம் எதிரி நீ யாருடா எனது வண்டி சாவியை எடுப்பதற்கு என்று கேட்டு நான் யாரிடம் வேலை பாக்கிறேன் என்று தெரியுமா என்று என்னிடம் மிரட்டும் தோரணையில் பேசினார். நான் உடனடியாக எனது உயர் அதிகாரியான ஆய்வாளருக்கு போன்

மூலம் தகவல் அளித்து அவரை சம்பவயிடத்திற்கு வரவைத்தேன். பின்னர் அவரும் அவருடன் ஆய்வாளர் திரு.இளையராஜாவும் அவருடைய ஓட்டுநர் சசிகுமாரும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். பின்னர் ஆய்வாளர் பிரீத் அனலேசர் (போதை அளவீடு செய்யும் கருவி ) மூலம் 1ம் எதிரியை சோதனை செய்ய முற்பட்டபோது அவர் சோதனைக்கு ஒத்துழைக்கவில்லை. உன்ன மாதிரி ஆயிரம் ஊள உதாரு போலிஸ் பார்த்து இருக்கிறேன் நீங்கள் எல்லாம் ஓல் ஓத்து சாப்பிடுவறன் என அசிங்கமாக திட்டினார். மேலும் இதேபோல் நாளை மதியம் 12.00 மணிக்கு கோட்டைமேட்டில் உள்ள நண்பர்களுடன் போதையில் குடித்துவிட்டு வருகிறேன். அப்ப நிறுத்தி பாரு நா என்ன பன்றேனு உனக்கு தெரியும். உங்க 2 பேரையும் எனக்கு தெரியும் உங்க 2 பேரையும் என்ன பன்றேனு பாரு என்று என்னுடைய வாக்கிடாக்கியையும் ஆய்வாளர் இளையராஜா அவர்களின் வாக்கி டாக்கியையும் பிடுங்கி கொண்டார்கள். எனது போனின் சம்பவத்தை வீடியோ பதிவு செய்ய முயற்சித்தபோது 1ம் எதிரி பாலாஜி பிடுங்கி வைத்துக்கொண்டு வண்டியின் சாவியை கொடுத்தால் எங்களுடைய வாக்கிடாக்கியையும் போனையும் கொடுப்பதாக கூறினார். அதனை தொடர்நது எதிரிகளை பெயர் மற்றும் முகவரியை பற்றி விசாரித்தபோது 1ம் எதிரி பெயர் பாலாஜி த/பெ.சுப்ரமணியன் வானவரெட்டி கிராமத்தை சேர்ந்தவர். வாகனத்தை ஓட்டிவந்தவர் 2ம் எதிரி பெயர் மனோகர் த/பெ.செல்வராஜ் மாடுர் கிராமத்தை சேர்ந்தவர் என்று தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து எதிரிகள் என்னிடமும் ஆய்வாளர் இளையராஜாவிடமும் போனும் வாக்கிடாக்கியையும் பிடுங்கி கொண்டதால் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்காக அலுவலக ஜுப்பினை எடுத்த போது 1ம் எதிரி பாலாஜி ஜுப்பின் பின்பக்க இடதுபுற வீலில் கால் வைத்துகொண்டு நீ எப்படி வாகனத்தை எடுக்கிற என்று நான் பாக்கிறேன் எங்கள் வண்டியை சாவியை கொடுக்காமல் ஜுப்பை எடுக்கவிடமாட்டேன் என்று கூறினார். பின்பு என்னுடன் இருந்த HG பாரதி மற்றும் HG அய்யப்பன் ஜுப் ஓட்டுநர் இருவரும் கீழே இறங்கி வந்து ஆஜர் எதிரிகளை ஜுப்பில் உட்கார வைத்து அவர்களிடம் இருந்து வாக்கிடாக்கியையும் செல்போனையும் வாங்கிகொண்டு காவல்நிலையம் அழைத்து சென்று எதிரிகள் எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து அசிங்கமாக திட்டியதால் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது

BANUMATHI

Digitally signed by BANUMATHI
Date: 2026.07.14 18:08:56 +0530

DEPOSITION OF WITNESSES
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI**

| | | |
|---|---|---|
| Name | : பாரதி | **STC.No.495/2025** |
| Fathers's Name | : பொன்னுசாமி | |
| Village | : சோமநாதபுரம் | |
| Taluk | : | |
| Age | : 35 | |

Petitioner - (Pw2)(LW2)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2026

**எதிரிகள் ஆஜர். சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.கணேசமூர்த்தி அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**முதல் விசாரணை.**

நான் மேற்படி கிராமத்தில் வசித்து கள்ளக்குறிச்சி ஊர் காவல் படையில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 08.03.2025 அன்று சுமார் மாலை 05.30 மணியளவில் கள்ளக்குறிச்சி போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ராஜேஷ் அவர்களுடன் நானும் HG அய்யப்பன் ஆகியோர்களுடன் முழுசீருடையில் எங்கள் பெயர் பொறித்த அடையாள பட்டையில் பொறித்து கள்ளக்குறிச்சி உழவர் சந்தை அருகே போக்குவரத்தை சீர் செய்து கொண்டிருந்தோம். அப்போது தியாகதுருகம் மார்க்கத்திலிருந்து கள்ளக்குறிச்சி நோக்கி 2ம் எதிரி TN-15-MH-0570 என்ற பதிவெண் கொண்ட எமகா R15 இருசக்கர வாகனத்தை 2ம் எதிரி மனோகர் ஓட்ட பின்னால் 1ம் எதிரி பாலாஜி அமர்ந்து போக்குவரத்து விதிகளை மீறி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் எங்களை கடந்து ரோட்டின் வடபுறமாக எதிர்திசையில் மேற்கு நோக்கி சென்றனர். அப்போது எதிர் திசையில் வாகனங்கள் வந்ததால் போக்குவரத்து முற்றிலுமாக எதிரிகளால் தடைசெய்யப்பட்டது. இதனால் உதவி ஆய்வாளர் எதிரிகளின் இருசக்கர வாகனத்தை மறித்து இடதுபுறமாக சாலை விதிகளை பின்பற்றி அவர்களை போகசொன்னார். ஆனால் அவர்கள் வார்த்தை மீறி இருசக்கர வாகனத்தின் இன்ஜினை ரேஸ் செய்து நகர்த்த முயற்சி செய்தார்கள். உதவி ஆய்வாளர் அவர்களை இறக்கிவிட்டு வண்டியை சாலையின் ஓரமாக நகர்த்தி வண்டியின் சாவியை கைப்பற்றி கொண்டார். பின்னர் அவர்கள் உதவி ஆய்வாளரை பார்த்து 1ம் எதிரி நீ யாருடா எனது வண்டி சாவியை எடுப்பதற்கு என்று கேட்டு நான் யாரிடம் வேலை பாக்கிறேன் என்று தெரியுமா என்று உதவி ஆய்வாளரிடம் மிரட்டும் தோரணையில் பேசினார். உதவி ஆய்வாளர் உடனடியாக தனது உயர்

அதிகாரியான ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் அளித்து அவரை சம்பவயிடத்திற்கு வர வழைத்தார். பின்னர் அவரும் அவருடன் ஆய்வாளர் திரு.இளையராஜாவும் அவருடைய ஓட்டுநர் சசிகுமாரும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். பின்னர் ஆய்வாளர் பிரீத் அனலேசர் (போதை அளவீடு செய்யும் கருவி ) மூலம் 1ம் எதிரியை சோதனை செய்ய முற்பட்டபோது அவர் சோதனைக்கு ஒத்துழைக்கவில்லை. உதவி ஆய்வாளைரை பார்த்து உன்ன மாதிரி ஆயிரம் ஊஉள உதாரு போலிஸ் பார்த்து இருக்கிறேன் நீங்கள் எல்லாம் ஓல் ஓத்து சாப்பிடுவறன் என அசிங்கமாக திட்டினார். மேலும் இதேபோல் நாளை மதியம் 12.00 மணிக்கு கோட்டைமேட்டில் உள்ள நண்பர்களுடன் போதையில் குடித்துவிட்டு வருகிறேன். அப்ப நிறுத்தி பாரு நா என்ன பன்றேனு உனக்கு தெரியும். உங்க 2 பேரையும் எனக்கு தெரியும் உங்க 2 பேரையும் என்ன பன்றேனு பாரு என்று உதவி ஆய்வாளர் வாக்கிடாக்கியையும் ஆய்வாளர் இளையராஜா அவர்களின் வாக்கி டாக்கியையும் பிடுங்கி கொண்டார்கள். உதவி ஆய்வாளர் தனது போனில் சம்பவத்தை வீடியோ பதிவு செய்ய முயற்சித்தபோது 1ம் எதிரி பாலாஜி பிடுங்கி வைத்துக்கொண்டு வண்டியின் சாவியை கொடுத்தால் எங்களுடைய வாக்கிடாக்கியையும் போனையும் கொடுப்பதாக கூறினார். அதனை தொடர்ந்து எதிரிகளை பெயர் மற்றும் முகவரியை பற்றி விசாரித்தபோது 1ம் எதிரி பெயர் பாலாஜி த/பெ.சுப்ரமணியன் வானவரெட்டி கிராமத்தை சேர்ந்தவர். வாகனத்தை ஓட்டிவந்தவர் 2ம் எதிரி பெயர் மனோகர் த/பெ.செல்வராஜ் மாடுர் கிராமத்தை சேர்ந்தவர் என்று தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து எதிரிகள் உதவி ஆய்வாளரிடமும் ஆய்வாளர் இளையராஜாவிடமும் போனும் வாக்கிடாக்கியையும் பிடுங்கி கொண்டதால் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்காக அலுவலக ஜுப்பினை எடுத்த போது 1ம் எதிரி பாலாஜி ஜுப்பின் பின்பக்க இடதுபுற வீலில் கால் வைத்துகொண்டு நீ எப்படி வாகனத்தை எடுக்கிற என்று நான் பாக்கிறேன் எங்கள் வண்டியை சாவியை கொடுக்காமல் ஜுப்பை எடுக்கவிடமாட்டேன் என்று கூறினார். பின்பு நானும் என்னுடன் இருந்த HG அய்யப்பன் மற்றும் ஜுப் ஓட்டுநர் இருவரும் கீழே இறங்கி வந்து ஆஜர் எதிரிகளை ஜுப்பில் உட்கார வைத்து அவர்களிடம் இருந்து வாக்கிடாக்கியையும் செல்போனையும் வாங்கிகொண்டு காவல்நிலையம் அழைத்து சென்று எதிரிகள் எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து அசிங்கமாக திட்டியதாக உதவி ஆய்வாளர் புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது

BANUMATHI

Digitally signed by BANUMATHI
Date: 2026.07.14 18:09:04 +0530

DEPOSITION OF WITNESSES

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI**

| | | |
|---|---|---|
| Name | : அய்யப்பன் | **STC.No.495/2025** |
| Fathers's Name | : பக்தவச்சலம் | |
| Village | : மோகூர் | |
| Taluk | : | |
| Age | : 25 | |

Petitioner - (Pw3)(LW4)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2026

**எதிரிகள் ஆஜர். சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.கணேசமூர்த்தி அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**முதல் விசாரணை.**

நான் மேற்படி கிராமத்தில் வசித்து கள்ளக்குறிச்சி ஊர் காவல் படையில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 08.03.2025 அன்று சுமார் மாலை 05.30 மணியளவில் கள்ளக்குறிச்சி போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ராஜேஷ் அவர்களுடன் நானும் HG பாரதி ஆகியோர்களுடன் முழுசீருடையில் எங்கள் பெயர் பொறித்த அடையாள பட்டையில் பொறித்து கள்ளக்குறிச்சி உழவர் சந்தை அருகே போக்குவரத்தை சீர் செய்து கொண்டிருந்தோம். அப்போது தியாகதுருகம் மார்க்கத்திலிருந்து கள்ளக்குறிச்சி நோக்கி 2ம் எதிரி TN-15-MH-0570 என்ற பதிவெண் கொண்ட எமகா R15 இருசக்கர வாகனத்தை 2ம் எதிரி மனோகர் ஓட்ட பின்னால் 1ம் எதிரி பாலாஜி அமர்ந்து போக்குவரத்து விதிகளை மீறி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் எங்களை கடந்து ரோட்டின் வடபுறமாக எதிர்திசையில் மேற்கு நோக்கி சென்றனர். அப்போது எதிர் திசையில் வாகனங்கள் வந்ததால் போக்குவரத்து முற்றிலுமாக எதிரிகளால் தடைசெய்யப்பட்டது. இதனால் உதவி ஆய்வாளர் எதிரிகளின் இருசக்கர வாகனத்தை மறித்து இடதுபுறமாக சாலை விதிகளை பின்பற்றி அவர்களை போகசொன்னார். ஆனால் அவர்கள் வார்த்தை மீறி இருசக்கர வாகனத்தின் இன்ஜினை ரேஸ் செய்து நகர்த்த முயற்சி செய்தார்கள். உதவி ஆய்வாளர் அவர்களை இறக்கிவிட்டு வண்டியை சாலையின் ஓரமாக நகர்த்தி வண்டியின் சாவியை கைப்பற்றி கொண்டார். பின்னர் அவர்கள் உதவி ஆய்வாளரை பார்த்து 1ம் எதிரி நீ யாருடா எனது வண்டி சாவியை எடுப்பதற்கு என்று கேட்டு நான்

யாரிடம் வேலை பாக்கிறேன் என்று தெரியுமா என்று உதவி ஆய்வாளரிடம் மிரட்டும் தோரணையில் பேசினார். உதவி ஆய்வாளர் உடனடியாக தனது உயர் அதிகாரியான ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் அளித்து அவரை சம்பவயிடத்திற்கு வர வழைத்தார். பின்னர் அவரும் அவருடன் ஆய்வாளர் திரு.இளையராஜாவும் அவருடைய ஓட்டுநர் சசிகுமாரும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். பின்னர் ஆய்வாளர் பிரீத் அனலேசர் (போதை அளவீடு செய்யும் கருவி ) மூலம் 1ம் எதிரியை சோதனை செய்ய முற்பட்டபோது அவர் சோதனைக்கு ஒத்துழைக்கவில்லை. உதவி ஆய்வாளரை பார்த்து உன்ன மாதிரி ஆயிரம் ஊள உதாரு போலிஸ் பார்த்து இருக்கிறேன் நீங்கள் எல்லாம் ஓல் ஓத்து சாப்பிடுவறன் என அசிங்கமாக திட்டினார். மேலும் இதேபோல் நாளை மதியம் 12.00 மணிக்கு கோட்டைமேட்டில் உள்ள நண்பர்களுடன் போதையில் குடித்துவிட்டு வருகிறேன். அப்ப நிறுத்தி பாரு நா என்ன பன்றேனு உனக்கு தெரியும். உங்க 2 பேரையும் எனக்கு தெரியும் உங்க 2 பேரையும் என்ன பன்றேனு பாரு என்று உதவி ஆய்வாளர் வாக்கிடாக்கியையும் ஆய்வாளர் இளையராஜா அவர்களின் வாக்கி டாக்கியையும் பிடுங்கி கொண்டார்கள். உதவி ஆய்வாளர் தனது போனில் சம்பவத்தை வீடியோ பதிவு செய்ய முயற்சித்தபோது 1ம் எதிரி பாலாஜி பிடுங்கி வைத்துக்கொண்டு வண்டியின் சாவியை கொடுத்தால் எங்களுடைய வாக்கிடாக்கியையும் போனையும் கொடுப்பதாக கூறினார். அதனை தொடர்ந்து எதிரிகளை பெயர் மற்றும் முகவரியை பற்றி விசாரித்தபோது 1ம் எதிரி பெயர் பாலாஜி த/பெ.சுப்ரமணியன் வானவரெட்டி கிராமத்தை சேர்ந்தவர். வாகனத்தை ஓட்டிவந்தவர் 2ம் எதிரி பெயர் மனோகர் த/பெ.செல்வராஜ் மாடுர் கிராமத்தை சேர்ந்தவர் என்று தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து எதிரிகள் உதவி ஆய்வாளரிடமும் ஆய்வாளர் இளையராஜாவிடமும் போனும் வாக்கிடாக்கியையும் பிடுங்கி கொண்டதால் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்காக அலுவலக ஜுப்பினை எடுத்த போது 1ம் எதிரி பாலாஜி ஜுப்பின் பின்பக்க இடதுபுற வீலில் கால் வைத்துகொண்டு நீ எப்படி வாகனத்தை எடுக்கிற என்று நான் பாக்கிறேன் எங்கள் வண்டியை சாவியை கொடுக்காமல் ஜுப்பை எடுக்கவிடமாட்டேன் என்று கூறினார். பின்பு நானும் என்னுடன் இருந்த HG பாரதி மற்றும் ஜுப் ஓட்டுநர் இருவரும் கீழே இறங்கி வந்து ஆஜர் எதிரிகளை ஜுப்பில் உட்கார வைத்து அவர்களிடம் இருந்து வாக்கிடாக்கியையும் செல்போனையும் வாங்கிகொண்டு காவல்நிலையம் அழைத்து சென்றார்கள் நான் எதிரிகளின் இருசக்கர வாகனத்தை சம்பவயிடத்தில் இருந்து எடுத்து சென்று காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். எதிரிகள் எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து அசிங்கமாக திட்டியதாக உதவி ஆய்வாளர் புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது

BANUMATHI

Digitally signed by BANUMATHI
Date: 2026.07.14 18:09:11 +0530

DEPOSITION OF WITNESSES

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI**

| | | |
|---|---|---|
| Name | : சசிகுமார் | **STC.No.495/2025** |
| Fathers's Name | : முனியன் | |
| Village | : மூரார்பாளையம் | |
| Taluk | : | |
| Age | : 42 | |

Petitioner - (Pw4)(LW5)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2026

**எதிரிகள் ஆஜர். சாட்சியை கள்ளக்குறிச்சி காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.கணேசமூர்த்தி அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**முதல் விசாரணை.**

நான் மேற்படி கிராமத்தில் வசித்து தற்சமயம் கள்ளக்குறிச்சி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கபிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 08.03.2025 அன்று கள்ளக்குறிச்சி போக்குவரத்து காவல் ஆய்வாளரிடம் வாகன ஓட்டுநராக பணியிலிருந்தபோது சுமார் மாலை 05.30 மணியளவில் கள்ளக்குறிச்சி போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ராஜேஷ் ஆய்வாளருக்கு போன் செய்தார். அப்போது ஆய்வாளருடன் அரசு வாகனத்தில் சம்பவயிடமான கள்ளக்குறிச்சி உழவர் சந்தை ஜங்ஷன் சென்றேன். சம்பவயிடத்தில் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜேஷ் அவருடன் HG பாரதி மற்றும் HG அய்யப்பன் ஆகியோர்கள் இருந்தார்கள். சம்பவயிடத்தில் ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். அவர்களுடன் TN-15-MH-0570 பதிவெண் கொண்ட எமகா R15 இருசக்கர வாகனம் இருந்தது. பின்னர் அங்கு வந்த ஆய்வாளர் பிரீத் அனலேசர் (போதை அளவீடு செய்யும் கருவி ) மூலம் 1ம் எதிரியை சோதனை செய்ய முற்பட்டபோது அவர் சோதனைக்கு ஒத்துழைக்கவில்லை. உதவி ஆய்வாளரை பார்த்து உன்ன மாதிரி ஆயிரம் ஊள உதாரு போலிஸ் பார்த்து இருக்கிறேன் நீங்கள் எல்லாம் ஓல் ஒத்து சாப்பிடுவறன் என அசிங்கமாக திட்டினார். மேலும் இதேபோல் நாளை மதியம் 12.00 மணிக்கு கோட்டைமேட்டில் உள்ள நண்பர்களுடன் போதையில் குடித்துவிட்டு வருகிறேன். அப்ப நிறுத்தி பாரு நா என்ன பன்றேனு உனக்கு தெரியும். உங்க 2 பேரையும் எனக்கு தெரியும் உங்க 2 பேரையும் என்ன பன்றேனு பாரு என்று உதவி ஆய்வாளர் வாக்கிடாக்கியையும் ஆய்வாளர்

இளையராஜா அவர்களின் வாக்கி டாக்கியையும் பிடுங்கி கொண்டார்கள். உதவி ஆய்வாளர் தனது போனில் சம்பவத்தை வீடியோ பதிவு செய்ய முயற்சித்தபோது 1ம் எதிரி பாலாஜி பிடுங்கி வைத்துக்கொண்டு வண்டியின் சாவியை கொடுத்தால் எங்களுடைய வாக்கிடாக்கியையும் போனையும் கொடுப்பதாக கூறினார். அதனை தொடர்ந்து எதிரிகளை பெயர் மற்றும் முகவரியை பற்றி விசாரித்தபோது 1ம் எதிரி பெயர் பாலாஜி த/பெ.சுப்ரமணியன் வானவரெட்டி கிராமத்தை சேர்ந்தவர். வாகனத்தை ஓட்டிவந்தவர் 2ம் எதிரி பெயர் மனோகர் த/பெ.செல்வராஜ் மாடூர் கிராமத்தை சேர்ந்தவர் என்று தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து எதிரிகள் உதவி ஆய்வாளரிடமும் ஆய்வாளர் இளையராஜாவிடமும் போனும் வாக்கிடாக்கியையும் பிடுங்கி கொண்டதால் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்காக அலுவலக ஜூப்பினை எடுத்த போது 1ம் எதிரி பாலாஜி ஜூப்பின் பின்பக்க இடதுபுற வீலில் கால் வைத்துகொண்டு நீ எப்படி வாகனத்தை எடுக்கிற என்று நான் பாக்கிறேன் எங்கள் வண்டியை சாவியை கொடுக்காமல் ஜூப்பை எடுக்கவிடமாட்டேன் என்று கூறினார். பின்பு நானும் என்னுடன் இருந்த HG பாரதி மற்றும் HG அய்யப்பன் இருவரும் கீழே இறங்கி வந்து ஆஜர் எதிரிகளை ஜூப்பில் உட்கார வைத்து அவர்களிடம் இருந்து வாக்கிடாக்கியையும் செல்போனையும் வாங்கிகொண்டு காவல்நிலையம் அழைத்து சென்றோம். HG பாரதி எதிரிகளின் இருசக்கர வாகனத்தை சம்பவயிடத்தில் இருந்து எடுத்து சென்று காவல்நிலையத்தில் ஒப்படைத்தார். எதிரிகள் எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து அசிங்கமாக திட்டியதாக உதவி ஆய்வாளர் புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது

BANUMATHI

Digitally signed by BANUMATHI
Date: 2026.07.14 18:09:18 +0530